# பங்குபற்றாளர்கள்

பவானி பொன்சேகா ஒரு வழக்கறிஞராகவும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் ஒரு சிரேஷ்ட ஆய்வாளராகவும் பணியாற்றுகின்றார். இவர் பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளதோடு சமூக பிரச்சினைகள் தொடர்பாகத் தேசிய, சர்வதேச மட்டத்தில் ஆதரவுத் தளத்தினைத் திரட்டுதல் மற்றும் பொதுநலன் தொடர்பான வழக்குகளிலும் ஈடுபடுகின்ற ஒருவராவார். நிலைமாறுகால நீதி தொடர்பான சர்வதேச ஆய்விதழது (International Journal on Transitional Justice) ஆசிரியர் குழுவிலும் கொழும்புப் பல்கலைகழகத்தில் வருகைதரு விரிவுரையாளராகவும் கடமையாற்றுகின்றார். 2016ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தினால் ஆலோசனைச் செயலணிக்கான ஆலோசகராக நியமிக்கப்பட்டிருந்ததோடு 2017-2021 வரையான காலத்தில் இலங்கைக்கான தேசிய மனித உரிமைகள் செயற்பாட்டுத் திட்டத்தினை வடிவமைப்பதற்கான வரைவுக்குழுவின் உறுப்பினராகவும் செயற்பட்டவராவார்.

கௌஷினி தம்மாலகே சமூக விஞ்ஞானிகள் சங்கத்தில் பணியாற்றுகின்ற ஒருவராவார். பால்நிலை, சனநாயகம், தேர்தல் அரசியல் மற்றும் இலங்கையில் இடதுசாரி அரசியலின் வரலாறு போன்றனவே இவரது முதன்மையான ஆய்வுத் தலைப்புகளாகும். இவர் பெருந்தோட்ட ஊழியர்களைத் திரட்டுவதில் பால்நிலை, இலங்கையில் மரபுசார் இடதுசாரிக் கட்சிகளின் அமைப்புசார் தந்திரோபாயங்கள் தொடர்பான ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளார்.

ஹசினி லேக்கம்வசம் ஒரு விரிவுரையாளராக பேராதனைப் பல்கலைக்கழக அரசறிவியல் துறையில் பணியாற்றுவதோடு சமூக விஞ்ஞானிகள் சங்கத்தினது பொலைட்டி (Polity) என்ற ஆங்கில சஞ்சிகையிலும் இணை-இதழாசிரியராகப் பணியாற்றுகின்றார். அடையாளக் கட்டமைப்புகளில் அரசியல் சமூகவியல், கல்வியினை சனநாயகப்படுத்தல், இடம்சார் அரசியல் போன்ற ஆய்வுப் புலங்களில் கற்கைகள் பலவற்றினை மேற்கொண்டுள்ளார்.

நிபுணிகா ஓ. லேக்கம்வசம் ஒரு விரிவுரையாளராக பூட்டான் நாட்டினது றோயல் திம்பு கல்லூரியில் அரசியல் விஞ்ஞானமும் சமூகவியல் நிகழ்ச்சித்திட்டமும் என்ற துறையில் பணியாற்றுகின்றார். அபிவிருத்தி மானிடவியல், இளைஞர்கள், சமாதானம், சனநாயகம் போன்ற ஆய்வுப் புலங்களில் பல கற்கைகளை மேற்கொண்டுள்ளார்.

சகினா மொய்னுதீன் ஒரு ஆய்வாளராக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினது ஆய்வுப் பிரிவான சோஷல் இன்டிகேட்டரில் பணியாற்றி வருகின்றார். இவர் அளவுசார் மற்றும் பண்புசார் ஆய்வுமுறைகள் தொடர்பாகப் பரந்த அனுபவத்தினைக் கொண்டுள்ளார். இவரது ஆய்வு அனுபவங்களானவை சனநாயகம் மற்றும் ஆளுகை தொடர்பான பொதுமக்களின் பார்வைகளும் எதிர்பார்ப்புகளும், அபிவிருத்தியின் கல்விசார் மற்றும் சுகாதாரப் பார்வைகள், யுத்தம் மற்றும் சமாதானம் தொடர்பான பிரச்சினைகள் (யுத்தத்திற்குப் பின்னராகவும் முரண்பாடுடைய சமூகங்களிலும்) பற்றிய கற்கைகளை மேற்கொள்ள உதவியளித்துள்ளன.

பிரதீப் பீரிஸ் ஒரு விரிவுரையாளராகக் கொழும்பு பல்கலைக்கழகத்தினது அரசியல் விஞ்ஞானமும் பொதுக்கொள்கையும் என்ற துறையில் பணியாற்றி வருகின்றார். இவர் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஆய்வுப் பிரிவான சோஷல் இன்டிகேட்டர் என்ற அமைப்பின் தாபகராகவும் காணப்படுகின்றார். இலங்கையில் சமஷ்டி பற்றிய விவாதத்திலிருந்து சனநாயகநிலை வரையான பல தலைப்புகளில் வெளியீடுகளை மேற்கொண்டுள்ளார். முரண்பாட்டுத் தீர்வு, பால்நிலை, அரசியல் கட்சிகள், உள்ளூராட்சி அரசாங்கம், தென்னாசியாவில் சனநாயகநிலை போன்ற ஆய்வுப் புலங்களில் ஈடுபாட்டுடன் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார்.

குஷ்மிலா ரணசிங்க ஒரு ஆய்வாளராக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் பணியாற்றுகின்றார். கொழும்புப் பல்கலைக்கழகச் சட்டபீடத்தினது பட்டதாரியான இவர், இலண்டன் பல்கலைகழகத்தில் சர்வதேச உறவுகளில் இளமாணிப் பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

ஷஷிக் சில்வா ஒரு கணிப்பீட்டு ஆய்வாளராக, அளவுசார் பகுப்பாய்வாளராக, பண்புசார் ஆய்வாளராக 15 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தினைக் கொண்டவராகக் காணப்படுகின்றார். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஆய்வுப் பிரிவான சோஷல் இன்டிகேட்டர் என்பதிலும் UNOPS இனது பிரயோக ஆய்வுப் பிரிவிலும் முன்னர் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். தற்போது இலங்கையில் சமூக விஞ்ஞானிகள் சங்கத்தில் ஆய்வாளராகவும்

நிர்வாக முகாமையாளராகவும் பணியாற்றி வருகின்றார். இலங்கையில் நல்லிணக்கம் தொடர்பான பல விளக்கங்களைப் புரிந்துகொள்ளல், நீதிக்கான பிரசைகளின் அபிலாசைகளைப் புரிந்துகொள்ளல், உள்ளூ ராட்சி ஆளுகையில் உள்ளீர்த்தல் மற்றும் நிகழாதபடி தடுத்தல் தொடர்பான ஆய்வுப்புலங்களில் கற்கைகளை மேற்கொண்டுள்ளார். பொது அபிப்பிராயம் பற்றிய ஆய்வுக்கான உலகச் சங்கம் (World Association for Public Opinion Research) என்ற அமைப்பின் உறுப்பினரான இவர் 2019ஆம் ஆண்டிலிருந்து ஆசியாவை பிரதிநிதித்துவப்படுத்தி இடம்பெறும் WAPOR இனது வருடாந்த மாநாட்டில் தனது ஆய்வினை முன்வைத்து வருகிறார்.